மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 12 செவ்வாய்க்கிழமை 29.08.2023 அதிர்வு 29


## யாழ். பல்கலையில் கல்வி கற்கும் சிங்கள மாணவன் கத்தியுடன் கைது!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்கும் சிங்கள மாணவன் ஒருவர் கத்தியுடன் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

04

## ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குகின்றார் அநுர

### தேசிய மக்கள் சக்தி தீர்மானம்



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக தன்னைக் களமிறக்குவதற்கு தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு தீர்மானித்துள்ளது என்று

04

## அரசின் ஜனநாயகச் விரோதச் செயல்களை ஐ.நாவின் பிரதிநிதியிடம் பட்டியலிட்ட அநுர



ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி மார்க் என்ட்ரோ பிரெஞ், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்கவை இன்று முற்பகல் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஜே.வி.பியின்

04

# இன வாதமும் மத வாதமும் பேசி தமிழ் எம்.பிக்களைச் சீண்டாதீர்!

## சந்திரிகா வலியுறுத்தல்

கொழும்பு,ஓகஸ்ட்29

"இனவாதம் பேசி - மதவாதம் பேசி வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சீண்டிப் பார்ப்பதை தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்."

- இவ்வாறு வலியுறுத்தினார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

"13 மைனஸ்", "13 பிளஸ்" எனக் கூறுபவர்களில் ஒரு தரப்பினர் இனவாதத்தையும் மதவாதத்தையும் வெளிப்படுத்தும் வகையில் செயற்படுகின்றனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

04



## போதைக்கு அடிமையான இளைஞர் கிருமித் தொற்றுக்குள்ளாகி மரணம்

### மேலுமொருவருக்கு யாழ். வைத்தியசாலையில் சிகிச்சை




அதிகளவான ஹெரோயினை ஊசி மூலம் நுகர்ந்து வந்த இளைஞர் ஒருவர் கிருமித் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த இளைஞரே உயிரிழந்துள்ளார்.

04

## சுகாதார அமைச்சர் கெஹலியவை பாதுகாக்க அரசு கடும் பிரயத்தனம்

### ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வெளிநாடு பறக்கத் தடை



செப்டெம்பர் முதல் வார நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது ஆளுங்கட்சியினர் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாடுகளில் தங்கியிருக்கும் ஆளுங்கட்சி உறுப்பினர்களை செப்டெம்பர் 5 ஆம் திகதிக்குள் நாடு திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி பிரதமர் கொறடா

04



# வல்லைச் சந்தியில் பற்றி எரிந்த பட்டா

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியில் வல்லை சந்திப்பகுதியில், பட்டா வாகனம் தீப்பிடித்ததில் எரிந்து நாசமாகியுள்ளது.

மின் கசிவினால் வாகனம் தீப்பற்றியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

பருத்தித்துறை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த பொருள்கள் ஏற்றும் பட்டா வாகனமே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மகளைக் கேலி செய்த இளைஞரை குத்திப் படுகொலை செய்த தந்தை!

## கொழும்பில் பயங்கரம் சந்தேகநபர் நேற்று கைது



இளைஞர் ஒருவர் தனது மகளைக் கேலி செய்ததால் ஆத்திரமடைந்த தந்தை, குறித்த இளைஞரை மார்பில் கத்தியால் குத்திக் கொலை செய்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு, கிராண்ட்பாஸ் – நவகம்புர பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய பரமானந்தன் தினேசன் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இளைஞரைக் கொலை செய்த நபர் நேற்று பொலிஸில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் கொலைக்குப் பயன்படுத்திய கூரிய கத்தி, அவர் அணிந்திருந்த ஆடைகள் மற்றும் அவருக்கு அடைக்கலம் கொடுத்த நண்பரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மூன்று பிள்ளைகளின் தந்தை எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# துப்பாக்கிச் சூட்டில் இளம் பெண் காயம்

## மைத்துனர் கைது



மாத்தறை, அக்குரஸ்ஸ – பங்கம தெதியகல பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த 25 வயதுடைய பெண், மாத்தறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கி சூட்டை நடத்தியவர், படுகாயமடைந்த பெண்ணின் மைத்துனர் என தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர், அக்குரஸ்ஸ பகுதியில் துப்பாக்கியுடன் இன்று காலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRALPARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

# சங்கிலியன் பூங்காவில் ‘யாழ் முயற்சியாளர் - 2023’ விற்பனைக் கண்காட்சி











சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும்

அவற்றிற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் முகமாகவும் இந்தக் கண்காட்சி இன்றும் நாளையும் யாழ்ப்பாணம், நல்லூர், முத்திரைச்சந்தி அருகாமையில் அமைந்துள்ள சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற

ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டமையோடு, மேலதிக அரசாங்க அதிபர் (காணி), நல்லூர் பிரதேச செயலாளர் எழிலரசி அன்ரன் யோகநாயகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் கமலகுமாரி கருணாநிதி, தொழிற்துறை திணைக்களத்தின் வடக்கு மாகாண பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் மற்றும் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நூறு வரையான முயற்சியாளர்கள் பங்கேற்றுள்ள இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு தரமான உற்பத்தி பொருள்களைக்

கொள்வனவு செய்து பயன் பெறுமாறும் யாழ் மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப்

பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு வார இறுதியிலும் மாவட்ட செயலகத்தினால் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்குமாக காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கண்காட்சி இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**போதைக்கு...**

திடீர் சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், வைத்திய பரிசோதனையில் இளைஞர் கிருமித் தொற்றுக்கு உள்ளாகி இருப்பதும், போதைக்கு அடிமையானவர் என்பதையும் வைத்தியர்கள் கண்டறிந்தனர்.

இளைஞருக்கான சிகிச்சையை வழங்கி வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை இன்னுமொரு இளைஞரும் போதைக்கு அடிமையான நிலையில், உடலில் கிருமித் தொற்றுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

**அரசின்...**

தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இலங்கை அலுவலகத்தின் அபிவிருத்தி ஆலோசகர் மற்றும் வதிவிட ஒருங்கிணைப்பாளர் எட்வட்டும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது இலங்கையின் நிகழ்கால பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அரசின் பொருளாதார இலக்குகள் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் மக்கள் மேலும் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டிய அநுரகுமார திஸாநாயக்க எம்.பி., அரசு தேர்தலை நடத்தாது மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்துள்ளமை தொடர்பிலும் ஐ.நா. பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

தேர்தலை நடத்துவதற்குக் கட்டளையைப் பிறப்பித்த நீதிபதிகள் நாடாளுமன்றச் சிறப்புரிமைக் குழுவுக்கு அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுனர் எனவும், மக்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்குமுறைக்குட்படுத்தி ஜனநாயக விரோதப் போக்கை அரசு முன்னெடுக்கின்றது எனவும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அலுவலகம் ஊடாக இதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான ஐக்கிய மக்கள் சக்தியின் நம்பிக்கையில்லாப் பிரேரணை செப்டெம்பர் 5 முதல் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. செப்டெம்பர் 7 அல்லது 8 ஆம் திகதிகளில் வாக்கெடுப்பு நடத்தப்படும்.

எனவே, அந்தப் பிரேரணையை தோற்கடிப்பதற்கும், ஆளுங்கட்சியின் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்கும் ஆளுங்கட்சியினர் கட்டாயம் சபையில் இருக்க வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

**இனவாதமும்...**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் வேளையில் நாட்டில் இனவெறியை, மதவெறியைத் தூண்டும் கருத்துக்கள் நாளுக்கு நாள் வந்துகொண்டிருக்கின்றன. இது முழு நாட்டுக்கும் பேரவமானத்தை ஏற்படுத்தும்.

வடக்கு - கிழக்கு மக்களோ அல்லது தெற்கில் உள்ள மக்களோ மீண்டுமொரு வன்முறையை - யுத்தத்தை விரும்பவில்லை. அரசியல்வாதிகள்தான் தங்கள் சுயலாபத்துக்காக இனவாதத்தையும், மதவாதத்தையும் கக்கி வருகின்றனர்.

இவ்வாறான நடவடிக்கைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அரசு இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.” - என்றார்.

**ஜனாதிபதி...**

அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

கட்சியின் நிறைவேற்றுக் குழுவால் நேற்று மாலையே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

‘ஹிரு’ தொலைக்காட்சியில் நேற்றிரவு ஒளிபரப்பான ‘சலகுண’ அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அநுர இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ பெயரிடப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் தமது வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அறிவித்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் குழப்ப நிலை இருக்கின்றது.

**சிங்கள மாணவன்**

வர்த்தக நிலையம் ஒன்றுக்குக் கத்தியுடன் சென்று வர்த்தக நிலையத்தில் வேலை செய்பவர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை தொடர்பில் வர்த்தக நிலைய உரிமையாளரால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மாணவனைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மாணவனைக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து, விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவுக்கு நாவற்குழியில் மாம்பழம் ஏலம்!





(த.சுபேசன்)

தென்மராட்சி - நாவற்குழி அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோவிலில் ஞாயிற்றுக்கிழமை (27) மாம்பழம் ஒன்று ஒரு லட்சத்து எழுபதாயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் பெறப்பட்டுள்ளது.

ஆலயத்தின் மாம்பழத் திருவிழா தினத்தன்று பிள்ளையாரின் திருவடிகளில் வைக்கப்பட்ட மாம்பழமே இவ்வாறு கார்த்திகேசு சிவகுமார் குடும்பத்தினரால் ஏலத்தில் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் பிரதேசங்களில் காணிகளை அபகரித்து பௌத்த சின்னங்கள் அமைப்பது பயங்கரவாதம்

## சமூக நீதிக்கான செயற்பாட்டாளர் அருட்தந்தை சத்திவேல் தெரிவிப்பு



பௌத்தர்களே இல்லாத தமிழர் பிரதேசங்களில் காணிகளைக் கைப்பற்றி பௌத்த மத சின்னங்களை, தூபிகளை, விகாரைகளை அமைப்பது பயங்கரவாதம்.

இவ்வாறு சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

அண்மைக்காலமாகக் காவி உடை தரித்த ஒரு சிலரின் நடவடிக்கைகள் தனி மனித சுதந்திரததுக்கும் நாட்டின் சட்டம் ஒழுங்குக்கும், நிர்வாகத்துக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இதனை நாட்டின் சட்டம் அங்கீகரிக்கப் போகின்றதா? என்ற கேள்வி எல்லோர் மனங்களிலும் எழுந்துள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்து கொண்டிருந்த போது காவி உடைத்தவர்களின் பயங்கரவாத செயற்பாட்டால் கூட்டம் தடைப்பட்டுள்ளமை தொடரப்போகும் காவி உடை தரித்தவர்களின் தீவிரவாதத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இது நாட்டின் ஏனைய பிரதேசங்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்கும் அச்சுறுத்தலாகவும், பிழையான முன் உதாரணமாகவும் அமைந்து விடப் போகின்றது. இத்தகைய பயங்கரவாத அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து அரசு அனுமதிக்கக் கூடாது.

நாட்டின் ஒரு சாதாரண குடிமகன், அல்லது விவசாய அமைப்புகள், மீனவர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், தொழிற்சங்கங்கள், சுகாதாரத் துறை சார்ந்தோர் தமக்கான நீதி கிட்டவில்லை என்பதற்காக அரசு திணைக்களங்களுக்குள் அல்லது அமைச்சர்கள் ஆளுநர்களின் தலைமையின் கீழ் நடக்கும் உத்தியோக பூர்வ கூட்டத்துக்குள் அத்துமீறி உள் நுழைய முடியுமா? அதற்குப் பாதுகாப்பு தரப்பினர் இடமளிப்பார்களா? அவ்வாறு உள் நுழைந்தால் அவர்களின் நிலை என்னவாகும்?

பௌத்தத்தின் பெயரால் காவி உடை தரித்து ஒரு சிலர் நீதித்துறைக்கு, நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பதையும் ஏனைய சமய தலைவர்களின் சுதந்திர நடமாட்டத்துக்கும் செயற்பாட்டுக்கும் தடையாக இருப்பதை எந்த சட்டம் அங்கீகரிக்கின்றது?

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் சர்வ மத தலைவர்கள் சிலரை காவி உடை அணிந்தோர் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக தடுத்து வைத்திருந்தனர்.

குருந்தூர் மலையில் நீதிமன்றத்தின் அனுமதியோடு நடைபெற்ற பொங்கலுக்கு தடையாக இருந்தனர். அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸாரையும் தாக்குகின்றனர்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டுக்கு சென்று கொலை அச்சுறுத்தல் விடுக்கின்றனர்.

36 ஆண்டுகளுக்கு முன் நிறைவேற்றப்பட்ட 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று நாடாளுமன்றத்தை நோக்கி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தி 13 ஆம் திருத்த நகலை பகிரங்க வெளியில் தீட்டு கொழுத்துகின்றனர்.

பௌத்தர்களே இல்லாத தமிழர் பிரதேசங்களில் காணிகளை கைப்பற்றி பௌத்த மத சின்னங்களை, தூபிகளை, விகாரைகளை அமைக்கின்றனர் இதுவே பயங்கரவாதம்.

இவ்வாறு நீதிக்கு அப்பாற்பட்டுச் செயல்படுவோரைக் கைது செய்வதற்குப் பாதுகாப்புப் படையினர் தயங்குவதாகத் தோன்றுகின்றது. அல்லது அவர்களின் பின்னால் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் சிந்திக்க வைக்கின்றது.

மிக அண்மையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சட்டம் ஒழுங்கை மீறுகின்றவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று அறிவித்திருந்தார். தற்போது கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடத்தப்பட்ட கூட்டத்துக்குள் நுழைந்து அமைதிக்குப் பங்கம் விளைவித்தவர்கள் கைது செய்யப்படுவார்களா?

நாட்டில் மீண்டும் இனவாத மதவாத வன்முறைகள் பலவந்தமாகத் தூண்டப்படுகின்றதை உடனடியாக தடுத்து நிறுத்துதல் வேண்டும்.

நீதி மன்றும் நிர்வாகத்துக்குத் தடையாக இருப்போர் கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படல் வேண்டும். குறிப்பாக நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பாவித்து வன்முறைக்குத் தூபமிடுவோர் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இருந்து இடைநிறுத்தப்படல் வேண்டும்.

பெரும்பான்மை இன அல்லது பெரும்பான்மை சமயத்தின் பெயரால் நடக்கும் அடாவடித்தனத்திற்கு ஒரு சில அரசியல்வாதிகளும் ஆதரவு வழங்குகின்றனர். அல்லது அதனைப் பார்த்து மகிழ்கின்றனர். இதனை அடுத்த தேர்தலுக்கான அறுவடையாகக் கூட நினைக்கின்றனர். இவர்களின் சூழ்ச்சிகளில் மக்கள் சிக்கிவிடக் கூடாது.

பதவி மோகத்தோடு இதனை அங்கீகரிப்பவர்களை மக்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். நாட்டின் சட்டம் அனைவருக்கும் சமம் என்பதை அரசு நிரூபிக்க வேண்டும். இல்லையெனில் சர்வதே சமூகத்தின் முன் தலை குனிவு ஏற்படுவதோடு தற்போது நாடு சந்தித்துக் கொண்டிருக்கும் பொருளாதார வீழ்ச்சியை விட மிக மோசமான நிகழ்ச்சியை சந்திக்க நேரிடும்.

விசேடமாக சமயத்தின் பெயராலோ இனத்தின் பெயராலோ இன்னுமொரு இனத்தை அல்லது சமயத்தை அவமதிப்பதும் முறுகல் நிலையை தோற்றுவிப்பதும், அதற்கான கருத்துக்களை வெளியிடுவதும் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயல்வதும், அதற்காக மக்களை திரட்டுவதும், தொல்லியல் வரலா ற்று சின்னங்களை அகற்றுவதும் அழிப்பதும் மறுப்பதும் கூட பயங்கரவாதமே. இதற்கு அரசு இடமளிக்கக்கூடாது என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.–என்றுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மதவாதத் தலைவர்கள்

பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மத ரீதியாக மக்களுக்கு சேவை செய்கின்றாரா? அல்லது அரசியல் ரீதியாக - ஓர் இன ரீதியாக - ஓர் இனவாதியாக - செயற்படுகின்றாரா? அவர் தாம் எந்த நிகழ்ச்சி நிரலில் செயல்படுகிறார் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

- இப்படிப் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார் ரெலோ அமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன்.

மத ரீதியாக தெய்வப் பணி புரிபவர்கள், அதுவும் இயேசு காட்டும் பாதையில் திருத் தொண்டு புரிபவர்களாகக் காட்டிக் கொள்வோர், ஒரு சாரருக்காக மட்டும் வாயைத் திறப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்திருக்கின்றார் கோவிந்தன் கருணாகரன்.

இலங்கையின் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் மத்தியில், தென்னிலங்கை கிறிஸ்தவ மதத் தலைமை பீடம் தொடர்பில் இருக்கும் ஆதங்கத்தை - விசனத்தை - நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்து வெளிப்பாடு அப்படியே பிரதிபலிக்கின்றது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி வேண்டும் என்ற பேராயரின் குரல் தவறானது அல்ல. ஆனால் நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு சாரருக்காக மட்டும் குரல் எழுப்பும் அவர், அதே நாட்டில், தமது கண்முன் அதிலும் விட பன்மடங்கு மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் எழுப்ப தவறியவர் மட்டுமின்றி, அந்தப் பாதிப்புகளுக்கு - அழிவுகளுக்கு - கொடூரங்களுக்கு - தார்மீக ரீதியில் துணை போன பெருந்தகை என்பதும் மறுக்கப்பாலதல்ல.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் அப்பாவி மக்கள் நூற்றுக் கணக்கில் படுகொலை செய்யப்பட்டமை போல பல மடங்கில் - பல்லாயிரக்கணக்கில் - அப்பாவித் தமிழ் மக்கள் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் கொன்றொழிக்கப்பட்டனர். கோவிந்தன் கருணாகரன் எம்.பி. குறிப்பிடுகின்றமை போல நவாலி தேவாலயம் மீது இலங்கை விமானப்படை நடத்திய கொடூரக் குண்டுவீச்சில் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த நூற்றுக்கும் அதிகமான அகதிகள் உடல் சிதறி பலியானார். அச்சமயத்தில் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவே பிற்காலத்தில் குற்ற உணர்ச்சியோடு அவ்விடயத்தை ஒப்புக்கொண்டு கருத்து வெளியிட்டிருந்தார். ஆனால் இந்த அநியாயங்கள் - கொடூரங்கள் - நடந்த போதும் சரி, இப்போதும் சரி, பேராயர் மல்கம் ரஞ்சித் போன்றோர் வாய் திறக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கேட்கவில்லை. அது மட்டுமல்ல, அந்தக் கொடூரங்களை வடக்கு - கிழக்கில் தமிழர் தாயகம் மீது புரிந்த அரச படைகளுக்கு கொழும்பில் இருந்தவாறு ஆசீர்வாதம் வழங்கி கொடூரம் புரிய அங்கு அனுப்பி கொண்டிருந்தனர். யுத்தம் முடிந்து 14 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட அந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அந்த அநீதிகளுக்காக நீதியே கேட்காத கடவுளின் தூதர்கள்(?) இவர்கள்.

இத்தகையோர் மதத்தலைவர்கள் என்ற விசால மனப்பான்மையின்றி, இனம், மதம் சார்ந்த குறுகிய அரசியல் தலைவர்கள் போன்றே செயல்படுகின்றார்கள்.

பௌத்த பீடத் தலைவர்களிடம் ஊறியிருப்பது மதவெறி. நீதிக்காக ஒரே குரலில் குரல் எழுப்பாத மேற்படி கொழும்புப் பேராயர் போன்றோரிடம் குடியிருப்பது மதம் பரப்பும் தந்திரம். அவ்வளவே. இயேசு காட்டிய மானுட தர்மம் அல்ல.

மன்னார் ஆயராக இருந்த இராயப்பு ஜோசெப் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை ஆயராக இருந்த கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை, இப்போது வடக்கு, கிழக்கில் இருக்கும் ஆயர்கள் போன்றோரின் மத அணியில்தான் பேராயர் மல்கம் ரஞ்சித் போன்றோரும் இருக்கிறார்கள் என்பது நம் மக்களுக்கு காரணம் விளங்காத உண்மை.

# பிரமிட் மோசடியில் ஈடுபட்ட சீன பிரஜை ஒருவர் கைது!



கொழும்பு போர்ட் சிட்டி என்ற துறைமுக நகரின் முதலீட்டாளராக தம்மைக் காட்டிக் கொண்டு சர்வ தேச அளவிலான பிரமிட் மோசடியில் ஈடுபட்ட சீன பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு – தெற்குப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பொரளை பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மோசடியில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சீனர்கள் ஈடுபட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மோசடியில் ஈடுபட்ட நபர் சட்டவிரோதமாகப் பெறப்பட்ட நிதியைச் சீனாவுக்கு மாற்ற உண்டியல் முறை பயன்படுத்தப்பட்டது என்றும் தெரிய வந்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சீன நாட்டவர், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் பிற நாடுகளில் உள்ள குடிமக்களுக்கு 100 அல்லது 200 அமெரிக்க டொலர்கள் வைப்புத் தொகைக்கு ஈடாக பலன்களை வாக்குறுதியளித்துள்ளார்.

எனினும் அவர் அந்த சலுகைகளைச் செலுத்தாமல் சுமார் 10,000 அமெரிக்க டொலர்களை வைப்பாகப் பெற்று மோசடியில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

# கல்முனை கோட்டத்துக்கு புதிய அதிகாரி நியமனம்



**(மாளிகைக்காடு நிருபர்)**

கல்முனை கோட்டக்கல்வி அதிகாரியாக கல்முனை கல்வி வலயத்தின் தமிழ் பாட உதவிக்கல்வி பணிப்பாளர் யூ.எல். றியால் நேற்று (28) தமது கடமைகளை பெறுப்பேற்று கொண்டார்.


கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம், வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக் கல்வி பணிப்பாளர்கள் முன்னிலையில் யூ.எல். றியால் தனது கடமைகளை பெறுப்பேற்று கொண்டார்.

கல்முனை மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களின் தமிழ் பாட உதவிக் கல்வி பணிப்பாளராக கடந்த பல வருடங்களாக கடமையாற்றிவரும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியான றியால் அப்பதவிக்கு மேலதிகமாகவே இந்த கோட்டக்கல்வி அதிகாரி பதவியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை

# அறிக்கை கத்தோலிக்க திருச்சபைக்கு

## வழங்கப்படும் என்கிறார் மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான முழுமையான விசாரணை அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய கத்தோலிக்க திருச்சபைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான பொலிஸ் விசாரணைகளுக்கு கத்தோலிக்க திருச்சபையாலும் ஒத்துழைப்பு வழங்க முடியும் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

பொலிஸ் அதிகாரிகளின் நியமனங்களின்போது, அரசியல் தலையீடுகள் இடம்பெறுவதைத் தடுத்துள்ளதுடன், கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த பொலிஸாரின் நலன்புரி சேவைகள் பலவற்றை தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அரசியல் தலையீடுகள் ஏதும் இல்லாமல் பொலிஸ் திணைக்களம் தற்போது சுயாதீனமான முறையில் செயற்படுகிறது.

இணையவழி ஊடாக கடவுச்சீட்டுகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் பொது மக்களுக்கு செயற்றிறன் மிக்க சேவைகளை வழங்கும் நோக்கில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் செயற்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களை நவீனமயப்படுத்த அவசியமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலமாக அரச சார்பற்ற நிறுவனங்களைப் பற்றி அதிகம் பேசப்படுகிறது. இது தவிர இந்நாட்டில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் இனிமேலும் செயற்பட முடியாது.

தற்போது பாதாள உலகக் குழுக்களுக்கு இடையில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகிறது. அவர்கள் தங்களுக்குள்ளேயே மோதிக் கொள்கின்றனர். குறிப்பாக போதைப் பொருள் தொடர்பாக இடம்பெறும் மோதல்களே இவ்வாறு அவர்கள் குழுக்களாகப் பிரிந்து தாக்குதல்களில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைகின்றது.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. பொறுப்புள்ள அரசு என்ற வகையில் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எந்தவொரு செயலையும் செய்ய அனுமதிக்க போவதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான முழுமையான விசாரணை அறிக்கையை கத்தோலிக்க திருச்சபைக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான பொலிஸ் விசாரணைகளுக்கு கத்தோலிக்க திருச்சபையாலும் ஒத்துழைப்பு வழங்க முடியும்.– என்றார்.



# பாலமுனையில் மரம் நடுகை

**(பௌசுல் றிபாஸ்)**

"சுற்றுப்புறச் சூழலை அழகுபடுத்துவோம்" எனும் தொனிப்பொருளில் பாலமுனை மின்ஹாஜ் மாஹா வித்தியாலயத்தில் மர நடுகை நேற்று திங்கட்கிழமை (28)இடம்பெற்றது.

அதிபர் கே.எல் உடைதுல்லாஹ் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச உதவி பிரதேச செயலாளர் நஜிஹா முஸாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



# சுகாதார துறையில் நிலவும் குறைபாடு: ஜெனிவாவிடம் முறையிடுவதற்கு முடிவு!

**மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான சங்கத்தின் தலைவர் சமல் சஞ்சீவ**

நாட்டின் சுகாதார துறையில் நிலவும் மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்து பாவனை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான சங்கம் கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்திடம் கடிதமொன்றை கையளித்துள்ளது. அடுத்த வாரம் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளோம். அப்பாவி மக்களின் உயிர்களை பாதுகாக்கும் நோக்கில் நாம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளோம்.

இதேவேளை இந்த பிரச்சினைகள் தொடர்பில் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றையும் முன்வைக்கவுள்ளார் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு–

நாட்டில் கடந்த ஒன்றரை வருடங்களாக மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. இவை இயற்கையாகத் தோன்றிய பிரச்சினை அல்ல. பொருத்தமற்ற நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் காரணமாக ஏற்பட்ட ஒன்று. நாட்டுக்குள் தரமற்ற மருந்துகள் கொண்டு வரப்பட்ட போது நாம் எச்சரிக்கை விடுத்தோம்.

அதனை மீறி மருந்து ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவால் இறக்குமதி செய்த மருந்துகள் காரணமாக பல மரணங்கள் சம்பவித்துள்ளன. இந்த விடயங்கள் தொடர்பில் நாம் தொடர்ச்சியாக சுகாதார அமைச்சுக்கு தெரிவித்த போதிலும் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டமையால் இன்று நாம் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இன்றளவிலும் மந்த போசனையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் அங்கவீனர்கள் தொடர்பான முறையான எந்தவித தகவல்களும் சுகாதார அமைச்சிடம் இல்லை. பொய்யான தரவுகளை பயன்படுத்தி உண்மையான தரவுகளை மறைப்பதற்கு முயற்சிக்கிறார்கள்.

அமைச்சர், அமைச்சின் செயலாளர், சுகாதார பணிப்பாளர் நாயகம் என அனைவராலும் மேற்கொள்ளப்படும் தவறுகள் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்தும் அதிகாரிகளை அடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள். அவசர மருந்து கொள்வனவு எனும் போர்வையில் பல கோடிகணக்கில் பணம் கொள்ளையடிக்கப்படுகிறது.

மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்து கொள்வனவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தற்போது ஐக்கிய நாடுகள் அலுவலகத்திடம் கடிதமொன்றை சமர்ப்பித்துள்ளோம். நாம் அடுத்த வாரம் ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளோம். அப்பாவி மக்களின் உயிர்களை பாதுகாக்கும் நோக்கில் நாம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளோம்.– என்றார்.

# நோய் மரணங்களைக் குறைக்கும் வகையில் சுகாதாரத் துறையின் நடவடிக்கை அவசியம்

**எரான் விக்ரமரத்ன எம்.பி. சுட்டிக்காட்டு**



நோய் நிலைமைகளால் ஏற்படக் கூடிய மரணங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் விதமாக சுகாதாரத் துறைஇயங்கவேண்டுமேதவிர,சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் விளைவாக தொடர் மரணங்கள் ஏற்படக் கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் சுகாதாரத்துறைசார் தொழில் வல்லுனர்களின் வெளியேற்றம் மற்றும் மருந்துப் பொருள் கொள்வனவுடன் தொடர்புடைய சர்ச்சைக்குரிய தீர்மானங்கள் என்பவற்றால் பொருளாதார நெருக்கடியானது தற்போது பாரிய சுகாதார நெருக்கடியாக மாற்றமடைந்து வருகின்றது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (28) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

# பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை எந்த நிகழ்ச்சி நிரலில் செயற்படுகிறார்?

## கேள்வி எழுப்புகிறார் கோவிந்தன் கருணாகரன் எம்.பி.



பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மத ரீதியாக மக்களுக்கு சேவை செய்கின்றாரா? அல்லது அரசியல் ரீதியாக ஒரு இனரீதியாக ஒரு இனவாதியாக செயற்படுகின்றாரா? அல்லது எந்த நிகழ்சி நிரலிலே இருக்கின்றார் என்பதை தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரனின் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

பேராயர் வடக்கு, கிழக்கு தமிழருக்கும் இந்தியாவுக்கும் எதிரான நிலைப்பாட்டில் இருக்கின்றாரா ? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. எனவே மதரீதியாக சேவை செய்பவர் ஒரு சாராருக்காக வாயைத் திறப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாட்டிலே தற்போது மீண்டும் ஒரு இனக்கலவரம் தோன்றிவிடும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் உருவெடுத்திருந்தாலும் இந்திய உளவுப் பிரிவு தங்களது அறிக்கை மூலமாக இலங்கையில் ஒரு இனக்கலவரம் ஏற்படுவதற்கான சாத்திய கூறுகள் இருப்பதாக அறிவித்துள்ளனர்.

இது வழமையாக ஒவ்வொரு தேர்தல் வரும் போது இனவாதத்தை தூண்டிவிட்டு அரசியல் செய்வது இந்த நாட்டில் வழமையாகிவிட்டது.

2019 ஜனாதிபதித் தேர்தலின் போதும் நாட்டில் தேவாலயங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களை சாதகமாக பயன்படுத்தி தேசிய பாதுகாப்புடன் சம்மந்தப்பட்ட ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற ஒரு பிரளயத்தை கிளப்பி ஜனாதிபதி தேர்தலை வென்றார்கள்.

இதனை மையமாக வைத்து ஒரு சில சிங்கள இனவாதிகள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை சுற்றிவளைக்க வேண்டும். வடக்கு கிழக்கில் பௌத்தத்துக்கு எதிராக தமிழர்கள் செயற்படுகின்றார்கள் என்று இனத் துவேசத்தைக் கிளப்பி விடுவது மாத்திரமல்லாது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டுக்கு முன்பு இரு நாள்கள் உதயகம்பன்பிலவும் புத்த பிக்குகளும் ஆர்ப்பாட்டம் செய்தனர் இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

அரசியல் அமைப்பின்படி அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடந்தே ஆகவேண்டும் என்பதுடன் மாகாண சபை தேர்தல் நடக்கக் கூடும். எனவே அடுத்த வருடம் ஒரு தேர்தல் ஆண்டாக இருக்கப் போகின்றது.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றால் கொழும்பில் சிங்களவரின் தலைநகரில் தமிழருக்கு எனவேலை என உதயகம்மன்பில கேட்கின்றார்? அவர் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் வடக்கு கிழக்கிலே சிங்களவர்கள் அடாத்தாக வந்து குடியேறியவர்கள் நாங்கள் தமிழர்கள் கொழும்பிலும் ஏனைய தென்பகுதியில் அடாத்தாக வந்து குடியேறவில்லை.

கொழும்பு சிங்கள தலைநகரம் வடக்கு கிழக்கு தமிழர்கள் தாயகம் என்று தெரிவிக்கும் நீங்கள், நாடாளுமன்றத்தில்ஒருபிரேரணையைகொண்டு

> **பேராயர் மல்கம் ரஞ்சித் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பாலம் அமைக்க இருப்பதாகவும் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்கின்ற இந்த ஆண்டகை அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு கொடுக்கும் போதும் இலங்கை வரைபடத்தையே மாற்றி கோல் சிற்றி அமைக்க கடலை மண்போட்டு நிரப்பி சீனாவுக்கு தாரைவார்க்கும் போது வாய்திறக்கவில்லை.**

வந்து வடக்கு, கிழக்கை பிரித்து எங்களை ஒரு தனிநாடாக பிரகடனப்படுத்தவும்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வரவுள்ளார். அதேவேளை சீன ஆய்வு கப்பல் வரவுள்ளது. இவ்வாறு மாறிமாறி பூகோள ரீதியாகவும் உள்ளூர் அரசியல் ரீதியாகவும் இலங்கை சிக்கித் தவிக்கின்றது. ஏன் என்றால் இலங்கைக்கு ஒரு உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கையும் இல்லாத அரசும் ஜனாதிபதியும் செயற்படுகின்றனவா? நடைபெற்றுவரும் இனரீதியான முறுகலை ஜனாதிபதி மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பது இந்த நாட்டுக்கு சுபீட்சமாக இருக்காது.

பேராயர் மல்கம் ரஞ்சித் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பாலம் அமைக்க இருப்பதாகவும் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்கின்ற இந்த ஆண்டகை அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு கொடுக்கும் போதும் இலங்கை வரைபடத்தையே மாற்றி கோல் சிற்றி அமைக்க கடலை மண் போட்டு நிரப்பி சீனாவுக்கு தாரைவார்க்கும் போது வாய்திறக்கவில்லை.




அதேபோன்று கடந்த காலங்களில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு நவாலி தேவாலயம் உட்பட தேவாலயங்கள் மீது குண்டுத் தாக்குதல் மற்றும் 2009முள்ளிவாய்க்காலில்ஒருஇலட்த்து 50 ஆயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது மற்றும் வடக்கு, கிழக்கில் பல கிறிஸ்தவ வணபிதாக்கள் படுகொலை செய்யப்பட்டபோது பேராயர் வாய்திறக்கவில்லை.

ஆனால் 2019 இல் தேவாலய குண்டுதாக்குலுக்கு நீதி கோருகின்றார். அதற்கு நாங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும். ஆனால் வடக்கு கிழக்கில் இருக்கின்ற ஆயர்களான மன்னார் ஆண்டகையாக இருந்த இராயப்பு ஜோசப், முள்ளி வாய்க்காலில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக சாட்சியளித்தார். அவ்வாறே மட்டு திருகோணமலை ஆண்டகையாக இருந்த கிங்ஸ்–லி சுவாம்பிள்ளை 1990 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற சம்பவங்களுக்கு குரல் கொடுத்தவர். அதேபோன்று தற்போதுள்ள மட்டு ஆயர் பொன்னையா ஆண்டகை அநியாயங்களுக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றார்.

ஆனால் இவர்களுக்கு மேலாக இருக்கின்ற பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சரத்வீரசேகர, உதயகம்பன்பல, விமல் வீரவன்ச போன்று ஒரு குறிப்பிட்ட சாராருக்கு சார்பாகவா அல்லது எந்த நிகழ்சி நிரலிலே இருக்கின்றார் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.– என்றார்.

# இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இந்த வார இறுதியில் இலங்கைக்கு விஜயம்

## - உறுதிப்படுத்தியது இந்திய பாதுகாப்பு பிரிவு



இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இந்த வார இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய பாதுகாப்பு பிரிவு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இரு நாட்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ள இந்திய பாதுகாப்பு அமைச்சர், திருகோண மலையில் அமைக்கப்படவுள்ள எண்ணெய் குழாய் நிர்மாணத்தை பார்வையிடவுள்ளார் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கைக்கு வருவதற்கு சீனக் கப்பல் அனுமதி கோரிய நிலையிலேயே, இந்திய பாதுகாப்பு அமைச்சரின் இலங்கைக்கான விஜயம் இடம்பெறவுள்ளது என 'த ஹிந்து' குறிப்பிட்டுள்ளது.

சீன ஆராய்ச்சி கப்பலான ஷி ஜன் 6 இலங்கைக்கு வர திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அதற்கு முன்னதாகவே இந்திய பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் இடம்பெறவுள்ளது.

இந்தியாவின் அதிக கவனத்தை ஈர்த்துள்ள ஷி ஜன் 6 எனப்படும் சீன ஆய்வு கப்பல் இலங்கைக்கு வருவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கி யுள்ளது. வெளிவிவகார அமைச்சு மற்றும் நாரா நிறுவனம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, குறித்த கப்பலுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

சீன ஆராய்ச்சிக் கப்பலான ஷி ஜன் 6 ஒக்டோபர் 25ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது.

எவ்வாறாயினும், விமானங்கள் உள்ளிட்ட இராணுவத் தளபாடங்களை தொடர்ச்சியாக இந்தியா வழங்கி வருவதாக 'த ஹிந்து' செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# மேற்கு வங்க பட்டாசு தொழிற்சாலையில் இடம்பெற்ற விபத்தில் 7 பேர் உயிரிழப்பு!





மேற்கு வங்கத்தில் பட்டாசு தொழிற் சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்கு வங்க மாநிலம் 24 பர்கானா மாவட்டத்தில் உள்ள துத்தாபுகூர் பகுதியில் இயங்கி வந்த பட்டாசு ஆலையில் நேற்று பயங்கர சத்தத்துடன் வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 7 பேர் உயிரிழந்தனர்.

பலர் படுகாயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தால், அருகில் உள்ள பல கட்டடங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த பட்டாசு ஆலை அனுமதி இன்றி இயங்கி வந்ததாக உள்ளூர் மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஒரே இடத்தில் அதிக பட்டாசுகளை சேமித்து வைத்ததே விபத்துக்கு காரணம் என மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். உரிய அனுமதி இல்லாமல் அந்த ஆலை இயங்கி வந்துள்ளது.

அத்துடன், அதிகாரிகள் இதுகுறித்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்று மேற்கு வங்க உணவுத் துறை அமைச்சரும், அப்பகுதியின் சட்டப் பேரவை உறுப்பினருமான ரதின் கோஷ் தெரிவித்துள்ளார்.

# காவிரியில் 24 ஆயிரம் கன அடி தண்ணீரை திறக்க கோரிக்கை!

காவிரியில் விநாடிக்கு 24 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்க உத்தரவிடக் கோரி காவிரி மேலாண்மை ஆணையத்தில் வலியுறுத்தப்படும் என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் கூறியுள்ளார்.

சென்னை கோட்டூர்புரத்தில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் இன்று ஊடகவியலாளர் களிடம் கருத்து தெரிவிக்கையில், காவிரி ஒழுங்காற்று குழுவிடம், விநாடிக்கு 24 ஆயிரம் கன அடி, வீதம் 10 நாட்களுக்கு தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்தோம். ஆனால், அந்தக் குழு, 15 நாட்களுக்கு 5000 கனஅடி தண்ணீர் திறக்க சிபாரிசு செய்திருக்கிறது.

அதுபோதுமானது அல்ல என்பது நம்முடைய நிலைப்பாடு. எனவே, இன்று காவிரி மேலாண்மை ஆணை யத்தின் கூட்டம் நடைபெறுகிறது. அந்தக் கூட்டத்தில், தமிழக நீர்வளத் துறை செயலர் சந்தீப் சக்சேனா உள் ளிட்டோர் கலந்துகொள்கின்றனர். அவர்களிடம் தமிழகத்தின் கோரிக்கையை வற்புறுத் தும்படி கோரியிருக்கிறேன் என்று தெரிவித் துள்ளார்.



# இம்ரான் கானுக்கு பிணை!

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீதான ஊழல் குற்றச் சாட்டை அடுத்து அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட ஆயம் இடைநிறுத்தியுள்ளது.

அத்துடன் அவருக்கு பிணை வழங்குவதற்கும் நீதிபதிகள் ஆயம் தீர்மானித்துள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிரதமராக இருந்தபோது அரச பரிசுகளை சட்டவிரோதமாக விற்ற குற்றச்சாட்டில் கடந்த 5 ஆம் திகதி இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது.

அத்துடன் தண்டனையின் விளைவாக, அந்த நாட்டின் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேர்தலில் போட்டியிட அவருக்கு ஐந்தாண்டுகளுக்கு தடையும் விதிக்கப்பட்டது.

இந்தநிலையில், இன்றைய தினம் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமருக்கு எதிரான தண்டனைகளை இடைநிறுத்தி அவருக்கு பிணை வழங்குவதற்கு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

## ஜி 20 மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்பு: மோடிக்கு தொலைபேசி எடுத்தார் புடின்!



இந்தியாவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஜி20 மாநாட்டில் பங்கேற்க இயலாதது குறித்து பிரதமர் நரேந்திர மோடியிடம் ரஷ்ய ஜனாதிபதி விளாதிமீர் புடின் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலாக ரஷ்ய தரப்பில் வெளியுறவு அமைச்சர் செர்கேய் லாவ்ரோவ் பங்கேற்பார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா தலைமை வகிக்கும் நிகழாண்டுக்கான ஜி20 உச்சி மாநாடு, வரும் செப்டம்பர் 9, 10 ஆம் திகதிகளில் தலைநகர் டில்லியில் நடைபெற உள்ளது.

இதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், சவூதி அரேபிய இளவரசர் முகமது பின் சல்மான் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர்.

அண்மையில் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற 'பிரிக்ஸ்' மாநாட்டில் புடின் பங்கேற்காத நிலையில், இந்தியாவில் நடைபெறும் ஜி20 மாநாட்டிலும் அவர் பங்கேற்க மாட்டார் என்பது தெரிய வந்துள்ளது.

உக்ரைன் மீதான மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கை காரணமாக அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என கூறப்படுகிறது.

இதேவேளை, ஜி20 மாநாட்டில் தன்னால் பங்கேற்க இயலாதது குறித்தும், இந்த முடிவைப் புரிந்துகொண்டதற்கு பிரதமருக்கு நன்றியையும் ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.

## இந்தோனேசியாவில் 7 மெக்னிடியூட் அளவில் நிலநடுக்கம்!

இந்தோனேசியாவின் பாலி கடற்பிராந்தியத்தில் 7 மெக்னிடியூட் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மரறம் நகருக்கு வடக்கே 203 கிலோமீட்டர் தொலைவில் 516 கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என ஐரோப்பிய – மத்தியதரை புவிசரித வியல் நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் நேற்று நிலநடுக்கம் ஒன்று ஏற்பட் டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 4.8ஆக பதிவாகியுள்ளது.

முன்னதாக கடந்த 18 ஆம் திகதி காபூலில் 4.5 அளவிலான நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது.

நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாரிய சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் அதிகரிக்கும் போலி வேலைவாய்ப்பு மோசடி!

கனடாவில் போலி வேலை வாய்ப்பு மோசடி சம்பவங்கள் அதிகரித்துள்ளன என கனேடிய மோசடி தவிர்ப்பு நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கிரிப்டோ கரன்சி மோசடி செயற்பாடுகளின் ஓர் அங்கமாக இவ்வாறு போலி வேலை வாய்ப்புகள் வழங்கும் பிரசசாரங்கள் அதிகரித்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இணைய வழியில் சுயாதீன பணிகளில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதாக பிரச்சாரம் செய்யப்படுகிறது. எனினும் தொழில் வாய்ப்பு வழங்கப்படுவதில்லை எனவும் பலர் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949